Reg. No. : ......................................

Name : ...........................................

**SY-520**

**SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2023**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் ஒன்று வீதம்**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. கடலும் கடல் சார்ந்த இடமும் எது ?

(அ) பாலை (ஆ) நெய்தல்

(இ) மருதம் (ஈ) குறிஞ்சி

2. 'தேடல்' என்ற கவிதையின் ஆசிரியர் ?

(அ) கவிஞர் அறிவுமதி (ஆ) கல்யாண்ஜி

(இ) விவேகா (ஈ) நந்தலாலா

3. உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளைக் கூறும் நூல் எது ?

(அ) கடல்புறா (ஆ) கரிப்பு மணிகள்

(இ) தலைமுறைகள் (ஈ) மூன்றாம் உலகப் போர்

4. தமிழ் மொழியின் மிகப் பழமையான இலக்கண நூல் எது?

(அ) நன்னூல் (ஆ) தொல்காப்பியம்

(இ) யாப்பருங்கலம் (ஈ) தண்டியலங்காரம்

5. "தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு

சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு"

– என்று கூறியவர் யார்?

(அ) பாரதியார் (ஆ) கவிமணி

(இ) பாரதிதாசன் (ஈ) வைரமுத்து

6. 'முத்தமிழ்க் காப்பியம்' என்று போற்றப்படும் நூல் எது?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை

(இ) வளையாபதி (ஈ) குண்டலகேசி

7. பாரதிதாசனின் இயற்பெயர்?

(அ) எத்திராஜ் அரங்கசாமி (ஆ) சுரதா

(இ) கனகசுப்புரத்தினம் (ஈ) இராஜகோபாலன்

8. களப்பிரர் காலத்தை எவ்வாறு அழைத்தனர்?

(அ) இருண்ட காலம் (ஆ) காப்பியக் காலம்

(இ) பக்தி காலம் (ஈ) ஐரோப்பியர் காலம்

9. உடலுக்கு எப்படி தலை முக்கியமோ அது போல் செய்திக்கு முக்கியமானது எது?

(அ) தலைப்பு (ஆ) கருத்து

(இ) படங்கள் (ஈ) விளம்பரங்கள்

10. 'Blog' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையானத் தமிழ்ச் சொல் எது?

(அ) இணையம் (ஆ) கணினி

(இ) கடவுச் சொல் (ஈ) வலைப்பூ

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (6 × 2 = 12 மதிப்பெண்கள்)**

11. கீழ்வருவனவற்றுள் கவிஞர் வாணிதாசனின் இரு நூல்களைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

- அழகின் சிரிப்பு
- கொடி முல்லை
- எழிலோவியம்
- ஆசிய ஜோதி

12. ஆயத்த வீடுகளின் நன்மைகள் இரண்டினை எழுதுங்கள்.

13. நீவாடுகளின் வகைகள் நான்கினை எழுதுங்கள்.

14. கீழ்வருவனவற்றள் சரியான இரண்டு தொடர்களைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

(அ) முக்கூடற் பள்ளு 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

(ஆ) முக்கூடற் பள்ளு காப்பிய வகைகளுள் ஒன்று.

(இ) முக்கூடற் பள்ளு உழவர் பெருமக்களின் வாழ்வியல் கூறுகளைப் பாடுபொருளாகக் கொண்டது.

(ஈ) முக்கூடற் பள்ளு உப்பளத் தொழிலை மையமாகக் கொண்டு அமைகிறது.

15. சிலப்பதிகாரம் – சிறு குறிப்பு எழுதுங்கள்.

16. செய்தித்தாளில் இடம்பெறும் இரண்டு தலைப்பு வகைகளை எழுதுங்கள்.

17. கருத்துப் பேட்டி – சிறு விளக்கம் எழுதுங்கள்.

18. கீழ்வரும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுங்கள்

- ★ சிரசு
- ★ உளவியல்
- ★ வெய்யோன்
- ★ அகிலம்

**19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் நான்கு வீதம்.**

**(5 × 4 = 20 மதிப்பெண்கள்)**

19. தூயத்தமிழில் எழுதுங்கள்.

"நா .... அந்தக்கால இண்டர் .... ஆனாலும்
முனைஞ்சு வேலை தேடினதுல படிச்சு
முடிச்ச மறு மாசமே கையில வேலை,
சம்பளம் .. ஆனா நீ? வேண்டாத
லொட்டு லொசுக்கு சொல்லிட்டு
குண்டு சட்டில குதிரை ஓட்டற!
உன்னால யாருக்கு ஆதாயம்.

20. "மாடிவீடு களமைத்து

வாழ வழி செய்துதந்தோன்

வாடுகிறான் வெம்பனியில் குளிரில் – அவன்

வாடுவதை என்று புவி காணும்"

– கவிஞர் சாமி பழனியப்பன்

– இப்பாடல் வரிகளுக்கு விமர்சனக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.

21. சமூக வளர்ச்சிக்கு மொழி முக்கியப் பங்கு வகிக்கிறதா? என்னும் தலைப்பில் விவாதக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.

22. சிற்றிலக்கியங்கள் – விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

23. 'ஐரோப்பியர்களின் தமிழ்ப் பணி' என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

24. 'பெண்கள் பாதுகாப்பும் ஊடகங்களும்' - வானொலி உரை தயார் செய்யுங்கள்.

**25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள் மதிப்பெண்கள் ஆறு வீதம்**

**($4 \times 6 = 24$ மதிப்பெண்கள்)**

25. கீழே தரப்பட்டுள்ள பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்

'வானத்து நிலவொளியின்

மென்மையன்ன நல்லிழையில்

ஆனஉடை நல்குமருந்தோழன் – அவன்

அரையுடையை என்று புவி காணும்?

– கவிஞர் சாமி பழனியப்பன்

26. தொழிலாளர் தினத்தன்று 'நெசவுத் தொழிலின் சிறப்புகள்' குறித்து உரையாற்ற சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

27. 'தனியொ ருவருக் குணவில்லை யெனில்

ஜகத்தினை யழித்திடுவோம்'

-பாரதியார்

'பகலும் இரவும் மாடாய் உழைத்து

பட்டினி கிடந்து ஓடாய் இளைத்து

பயந்து பயந்து காலங் கழித்து

நலிந்த எளியோர்'

– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

மேற் குறிப்பிட்ட பாடலடிகளை ஒப்பீடு செய்து குறிப்புத் தயார் செய்யுங்கள்.

28. அழியும் தறுவாயில் உள்ள ஒரு மொழியை எவ்வாறு பாதுகாக்கலாம் என்ற கருத்தை அடியொற்றி பத்திரிக்கைக்கு அனுப்பத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

29. திரைப்பட இயக்குனர் மணிரத்தினம் அவர்கள் உங்கள் பள்ளி கலை விழாவினைத் தொடங்கி வைக்க வருகை தரவுள்ளார். அவரைப் பேட்டிக் காண ஐந்து வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

**30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இருபக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள் மதிப்பெண்கள் எட்டு வீதம்**

**($2 \times 8$ = 16 மதிப்பெண்கள்)**

30. உங்கள் பள்ளி இலக்கிய மலரில் வெளியிட 'இயற்கைப் பேரிடர்களும் பாதிப்புகளும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

காடுகள் அழியும் நிலை

நீரினால் பரவும் நோய்

இயற்கை வளங்கள் அழியும் நிலை

நிலச்சரிவுகள் ஏற்படுதல்

31. 'அன்பின் விதைகள்' என்ற சிறுகதையைத் திறனாய்வு செய்து எழுதுங்கள்.

குறிப்புகள்:

கதைக் கரு

கதாப்பாத்திரம்

மொழிநடை

கதைப்பின்னணி

32. உலகத் இணையதள நாளையொட்டி உங்கள் பள்ளியில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கேற்க 'தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்' என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

தமிழ் வலைப்பூ

வலைப்பூ சேவை

முதல் தமிழ் வலைப்பூ

தமிழ் வளர்ச்சியில் வலைப் பூக்கள்

---